1979 மார்ச் 21] [பேரவைத் தலைவர்]

இப்படிப்பட்ட பிரச்னைகள் குறித்து இங்கே ஒழுங்குப் பிரச்னை என்று எழுப்பக்கூடாது. திரு. அழகர்சாமி அவர்கள் தவறான தகவலைத் தரக்கூடாது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவைப்பற்றி எந்தத்தலைவரும் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என்னுடைய தவறு அல்ல. அந்தந்தக் கட்சித் தலைவர்களை உறுப்பினர்கள் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது ; தயவு செய்து உட்காருங்கள்.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) குருவிகுளம் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களது உண்ணாவிரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-வது விதியின்கீழ் திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், டி. ஞானசிகாமணி ஆகியோர் ஒரு அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் பணியாற்றும் ஆசிரியர்களின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்த பணத்திற்கு கணக்கில் வரவு வைத்து புத்தகம் வழங்காததற்கும், மற்றும் பல கோரிக்கைகளுக்காகவும் ஆசிரியர்கள் அனைவரும் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்துள்ளதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, 20—2—1979 அன்று குருவிகுளம் ஊராட்சி ஒன்றிய ஆணையரும், பள்ளித் துணை ஆய்வாளரும் ஆசிரியர்கள் பிரதிநிதிகளும் கலந்து, பேச்சுவார்த்தை நடத்தியதன் காரணமாக ஆசிரியர்கள் உண்ணாவிரதத்தை கைவிட்டுவிட்டனர்.

குருவிகுளம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் ஆசிரியர்களின் நான்கு கோரிக்கைகளையும் துரிதமாக நிறைவேற்ற வாக்குறுதி அளித்துள்ளார். ஆசிரியர்களின் கோரிக்கைகளை வாக்குறுதி அளித்தபடி தீர்த்து வைக்க வேண்டுமென்று ஊராட்சி ஒன்றிய ஆணையரை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தியுள்ளார். இது சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கையினை மாவட்ட ஆட்சித் தலைவர் கவனித்துக்கொண்டுள்ளார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, ஆசிரியர்களின் கோரிக்கைகள் பற்றி பேசியது சரி. ஏற்கெனவே அவர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட பணத்தை உடனடியாக பாங்கிலே கட்டி, கணக்கை ஒழுங்குபடுத்தி, பாஸ்புக் வழங்குவதில் கஷ்டம் இல்லை. அதைச் செய்ய அரசாங்கம் உடனடியாக உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் நான்கு. அந்தக் கோரிக்கைகள் அனைத்தும் 30—6—79க்குள் நிறைவேற்றி வைக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, பிராவிடன்ட் பண்டுக்கு வசூல் செய்த பணத்தை முறையாக கணக்கு வைக்காமல் எந்தவகையில் செலவழிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. ஆனால் இப்படி காலாகாலத்தில் செய்யப்படாதது டெம்பரரி மிஸ் அப்ராபிரியேஷன் என்ற முறையில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. கயத்தாறு ஒன்றியத்தில் இப்படி நடந்திருக்கிறது. வேறு பல தனியார் பள்ளிகளிலும் இந்தமாதிரி நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட டெம்பரரி மிஸ் அப்ராபிரியேஷன் செய்கின்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இதிலே தவறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. கோரிக்கைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்ற ஆணையர் ஒப்புக்கொண்டிருக்கிறார். அந்த வாக்குறுதியை ஆசிரியர்களும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இடையிலே நாம் புகுந்து திருத்த வேண்டியதில்லை.

(ஆ) மாலைப்பட்டி கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் கோவிலுக்குச் செல்ல முடியாது வழி அடைக்கப்பட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி அவர்கள் ஒரு அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.